THE HON. SRI C. SUBRAMANIAM : ஆசிரியர்களைப் பற்றி இங்கே ஒன்றும் சொல்வதற்கில்லை. பரீட்சாதிகாரிகளின் திறமைக்குறைவு ஓரளவு என்றும் சொல்லலாம். ஆனாலும் இந்த விஷயத்தில் மாணவர்களுக்குத் திறமை அதிகம் என்பதைத் தான் இது காட்டுகிறது.

Pension (teachers)

* 1847 *Q.*—SRI S. SADASIVAM (on behalf of SRI A. A. RASHEED) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have sanctioned an increase in the pension of retired B.T. Assistants and Headmasters; and

(*b*) if so, the total amount sanctioned?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) B.T. Assistants and Headmasters who retired before 1st July 1960 were eligible for pension calculated at the rate of one rupee for each year of service subject to a maximum of Rs. 30 in the case of Headmasters, a special additional pension calculated at the rate of one rupee per year of service as Headmaster, subject to a maximum of Rs. 5 was admissible. The scheme of pension has been revised with effect from 1st July 1960, under which B.T. Assistants and Headmasters, retiring on or after that date, will be eligible for pension like other teachers, on the basis of the total years of service and the average emoluments drawn during the last three years, subject to a maximum of Rs. 60 and 75 per mensem respectively.

Drinking water schemes

* 1848 Q.—SRI M. D. THIAGARAJA PILLAI (on behalf of Sri N. R. THIAGARAJAN) : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குடி தண்ணீர் திட்டங்களுக்காக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் செலவு செய்ய மத்திய சர்க்கார் நமது சர்க்காருக்குக் கொடுத்த பணம் எவ்வளவு ?

(இ) இதர வகைகளில் நமது ராஜ்ய குடி தண்ணீர் திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் பணம் கொடுத்ததா ?

(உ) அதில் எவ்வளவு செலவானது ? செலவாகாதது எவ்வளவு ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The final figures of assistance for 1960–61 have not been received yet from the Government of India and consequently the actual amount of assistance for the Second Plan Period is not yet available.

SRI R. SRINIVASA IYER : Sir, in this water supply scheme, there are several schemes—Central Government and State Government schemes. There was a suggestion by the Estimates Committee that instead of different set of officers working in the same area, they might be integrated under a single scheme. Is there any proposal before the Government to implement it?

THE HON. SRI M. A. MANICKAVELU : Now one scheme, viz., the National Water Supply and Sanitation Rural Scheme will not be available hereafter because they have stopped that scheme. Under that head, though the provision is Rs. 121.54 lakhs, 121.80 lakhs have been spent. So, we have spent a little more than what has actually been provided for. As regards other schemes, there will naturally be urban schemes. With regard to the Rural Water Supply Scheme, now some amount is provided for under the Medical and Public Health Department, and it is proposed to have water supply schemes under the Community Development Department. So, one scheme goes out and as regards other schemes, there will be integration between the schemes of the Community Development and Public Health.

SRI M. KALYANASUNDARAM : கிராமப்புறத்தில் இதுவரை அமுல் நடத்தப்பட்ட குடிதண்ணீர் வழங்கும் திட்டங்கள் எந்த முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கிறன்றன ? செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு ? அதற்கேற்ற பலன் அளித்திருக்கிறதா என்பதையெல்லாம் முறையாகப் பரிசிலனை செய்து மதிப்பிட்டு, அந்த அநுபவத்தை வைத்துக்கொண்டு புதிய திட்டங்களை வகுக்க சர்க்கார் முயற்சி செய்யுமா ? அந்த மாதிரி குறைபாடு வராமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : The question is not that the scheme so far worked out has not been beneficial but the difficulty is the paucity of funds. That is why we are now trying to push it through both the Community Development and Public Health Departments. The Rural Water Supply Scheme is a vast scheme and we require a lot of money. The hon. Member may perhaps be aware that the Government of India have appointed a Committee under the Chairmanship of the Minister for Local Administration to go into this matter and I think they have submitted an interim report and the final report is awaited. In that way we may tackle the problem on a large scale.

SRI M. KALYANASUNDARAM : பல கிராமங்களிலே குழாய் போடப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டு இரண்டு மூன்று வருடங்கள் ஆகியும் கூட இன்னும் தண்ணீர் வரவில்லையென்பது கனம் அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, there are some rare instances like that. I actually saw that in the Vridhachalam taluk. That is due to the fact that pump-sets have not worked properly and the repair facilities are not there. Now we have taken special steps to see that such pump-sets work properly.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இனிமேல் இத்திட்டங்களுக்கு மத்திய சர்க்கார் கிராண்டு எவ்வளவு எதிர்பார்க்கப்படுகிறது ? ஐம்பது சத விகிதம் கிடைக்குமா ? 75 சத விகிதம் கிடைக்குமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : முன்பு இருந்த திட்டம் இப்போது இல்லை. இப்போது மத்திய சர்க்கார் நோக்கமே கடன் கொடுப்பதாகத் தான் இருக்கிறது. அநேகமாக புதுத் திட்டம் பற்றி அவர்கள் என்ன முடிவு செய்வார்கள் என்பது பின்னால்தான் தெரியும்.

SRI M. S. SELVARAJAN : தேசீய குடிதண்ணீர் வழங்கும் திட்டத்தின்கீழ் தொத்து நோய் பரவாமல் இருக்கவே நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவ்வசதி பெற தொத்து நோய்க்கு உட்பட்ட இடங்களில் கூட

ஜனத்தொகை ஐந்து ஆயிரத்துக்கு மேல் போகக் கூடாது என்ற ஒரு தடை இருக்கிறது. அது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானுல் அதற்குரிய காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்தத் திட்டம் தான் இப்போது அடியோடு போய்விட்டதே.

SRI M. KALYANASUNDARAM : மிக வேகமாக அபிவிருத்தி அடைந்து வருகிற நகரங்களின் குடிதண்ணீர் பிரச்னையைக் கருத்தில் கொண்டு இதை மறு பரிசீலனை செய்து திருத்தி அமைப்பதற்கு ஒரு விசாரணைக் கமிட்டியை நியமிக்க ஆலோசனை செய்யப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதில் விசாரணைக் கமிட்டி ஏற்படுத்துவது அல்ல பிரச்னை. நமக்கு வேண்டியது முக்கியமாகப் பணம். அதை வைத்துக் கொண்டு திட்டத்தை ஒழுங்கு செய்ய வேண்டும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே குடிதண்ணீர் திட்டங்களுக்காக நமக்கு 407 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. நாம் 593 லட்சத்திற்குச் செலவு செய்திருக்கிறோம்.

High Schools

* 1849 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

9-30 a.m.

(அ) நமது ராஜ்யத்திலுள்ள எல்லா உயர்தர பாடசாலைகளையும் சர்க்காரே எடுத்து நடத்த உத்தேசமுண்டா ?

(இ) எப்போதிலிருந்து ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்காரே எடுத்து நடத்தவில்லையென்று சொன்ன போதிலும் சர்க்கார் நடத்தக்கூடியது, ஸ்தலஸ்தாபனங்கள் நடத்தக் கூடியது, தனியார் துறையில் நடத்தக்கூடியது போன்ற உயர்தர பாடசாலைகளை எல்லாம் எந்த முறையில் நடத்துவதாக உத்தேசம்? என்பதைப்பற்றி விவரமாக அறிவிக்க முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : சர்க்கார் எடுத்து நடத்தும் உத்தேசம்உண்டா என்று கேட்கப்பட்டிருக்கிறது, இல்லை என்று சொன்னேன். அடுத்தபடி செகன்டரி எஜுகேஷனைப் பற்றி—பாலிஸி பற்றி கேட்கிறார்கள். பாலிஸி பற்றி கேள்வி நேரத்தில் விடை மூலம் சொல்ல முடியாது.

Government Headquarters Hospital, Vellore

* 1850 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேலூர் ஜில்லா தலைமை சர்க்கார் ஆஸ்பத்திரியில் போதிய டாக்டர்களும், நர்சுகளும், சிப்பந்திகளும், மருந்தும் இல்லை என்று நோயாளிகள் முறையிடுவது உண்மையா ?

(இ) அப்படியானுல், இக்குறைகளைப் போக்க சர்க்கார் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No such complaint has been received from any of the patients in the hospital.

(*b*) Does not arise.

DEPUTY SPEAKER : Questions are over.